# பட்டயம்

மலர் - 08 ஏப்ரல் - 2012 இதழ் - 6

Date of Issue : 01-04-2012

Place of Publication : 86 / 222H, Main Road, Panagudi - 627 109. Tirunelveli District, Tamil Nadu.

Volume : 8

Issue : 6 Price Per Copy : Rs.5.00



**LORD! GIVE US FREEDOM LIKE BIRDS (MT 6/26)**

பறவைகளைப் போல் விடுதலை வாழ்வு
அளித்திடும் கர்த்தாவே (மத் 6/26)

## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.in

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

# ஆசிரியர் கடிதம்

கர்த்தராகிய உன் ஆண்டவரும் தம்முடைய ஜனத்துக்காக வழக்காடப் போகிற உன் தேவனுமானவர் சொல்லுகிறது என்னவென்றால், இதோ தத்தளிப்பின் பாத்திரத்தை உன் கையிருந்து நீக்கிப் போடுகிறேன். இனி என் உக்கிரத்தினுடைய பாத்திரத்தின் வண்டல்களை நீ குடிப்பதில்லை. -ஏசாயா 51/22

சத்துருக்களாலும், சாத்தானாலும் நீங்கள் தத்தளிப்பின் அனுபவத்துக்குள் இது வரைக்கும் இருந்திருக்கலாம். ஆனால் நீங்கள் விசுவாசித்து ஜெபிக்கும் போது தத்தளிப்பின் பாத்திரத்தை உன் கையிருந்து அவர் நீக்கிப் போடுகிறார். உன்னை நோக்கி, நாங்கள் கடந்து போகும்படி குனியென்று சொல் நீ உன் முதுகை தரையும் வீதியுமாக்கும்படி உன்னைச் சஞ்சலபடுத்தினவர்களின் கைகளிலே அதை கொடுப்பார் (ஏசாயா51/23)

துன்மார்க்கரின் கொம்புகளை வெட்டிப்போடுவார். பிசாசின் பெலன், ஆள் பெலம், பணபெலம் யாவும் ஒழிந்து போகும். துன்மார்க்கர் தங்கள் பண பெலத்தாலும் தப்பிக் கொள்ள முடியாது. நம் ஆஸ்தி ஆண்டவராக இருக்க வேண்டும். அவரை நம் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும். எல்லாவற்றையும் விட அவரில் அதிகமாக நாம் அன்புகூர வேண்டும். அப்போது நீதிமான்களின் கொம்புகள் உயர்த்தப்படும். உபவாசிக்கிற நேரத்தில் உபவாசியுங்கள். அவரைத் தேடுகிற நேரத்தில் தேடுங்கள். விழித்திருந்து போராடி ஜெபியுங்கள். இடைவிடாமல் தொடர்ந்து ஜெபியுங்கள். அப்போது நிச்சயம் ஜெயம் தருவார்.

அதிசயமான, அற்புதமான, ஆச்சரியமான காரியங்களை அவர் தம் பிள்ளைகளுக்குச் செய்வார்; நியாயம் செய்வார். நமக்கு விரோதமாய் இறுமாப்புள்ள கழுத்துள்ளவர்களாய் பேசிய வாயை தேவன் அடைப்பார். அவர் பிள்ளைகளுக்காக யுத்தம் செய்து அவர்களை உயர்த்துவார். கனவீனம் பண்ணின மக்கள் முன்பாக கனம் பண்ணுவார். நீங்கள் தோல்வி அடைந்த காரியங்களிலே உங்களுக்கு வெற்றி தருவார். ஜெயம் கர்த்தரிடமிருந்து உங்களுக்கு வரும். அவர் நியாயம் செய்து உன்னை தாழ்த்தினவர்களைத் தாழ்த்துவார். உன்னையோ அவர்கள் கண்களின் முன்பாக உயர்த்துவார். உன்னை தத்தளிக்கப் பண்ணினவர்களை தத்தளிக்கப் பண்ணுவார். தாவீதை தாழ்த்தும்படி பெலிஸ்தியன் வந்தான். அவன் கையிருந்து விடுதலை கொடுத்தார். சவுல் கையிருந்து தாவீதுக்கு விடுதலை கொடுத்து அவனுக்கு முன்பாக தாவீதை உயர்த்தினார். பெலிஸ்தியனான கோயாத்தோடு பிசாசு பெலம் இருந்தது, இயேசுவின் நாமத்தினால் தாவீது சென்றான்; ஒரு கல்னால் கோயாத்தை வீழ்த்தினான். அது போல தேவபிள்ளைகளை சத்துருக்களுக்கு முன்பாக மேன்மைப் படுத்துவார். உன் தத்தளிப்பின் அனுபவம் மாறும் என்பதை விசுவாசித்து ஜெபித்து ஜெயம் பெறு, கர்த்தர் தாமே இந்த வசனங்களின்படி நமக்கு செய்வாராக.

ஆமென்.

# ஸ்தோத்திர பலிகளை ஏறெடுப்போம்

1. பார சிலுவை சுமந்தவரே! ஸ்தோத்திரம்
2. 3 ஆணிகளில் தொங்கியவரே! ஸ்தோத்திரம்
3. ஆவி, ஆத்துமா, சரீரத்தை மூன்றும் முழுவதுமாக அர்ப்பணித்தவரே! ஸ்
4. எனக்காய் ஆவியை விட்டவரே! ஸ்தோத்திரம்
5. எனக்காய் ஆத்துமாவை மரணத்திலூற்றியவரே! ஸ்தோத்திரம்
6. எனக்காய் சரீரத்தை ஒப்புக் கொடுத்தவரே! ஸ்தோத்திரம்
7. முள்முடி சூட்டடப்பட்டவரே! ஸ்தோத்திரம்
8. எனக்காக பலியானவரே! ஸ்தோத்திரம்
9. எனக்காக ஜீவன் விட்டவரே! ஸ்தோத்திரம்
10. எனக்காய் கடைசி சொட்டு இரத்தம் வரை சிந்தியவரே! ஸ்
11. பாடுபட்டு சிலுவை சுமந்தவரே! ஸ்தோத்திரம்
12. சிலுவையிலே பாடு, வேதனைகள் அடைந்தவரே! ஸ்தோத்திரம்
13. பாடுகளோடு தொங்கியவரே! ஸ்தோத்திரம்
14. வேதனைப்பட்டு மரித்தவரே! ஸ்தோத்திரம்
15. கை, கால்களிலே ஆணிகள் அறையப்பட்டவரே! ஸ்தோத்திரம்
16. இருதயத்திலிருந்து இரத்தம் சிந்தியவரே! ஸ்தோத்திரம்
17. தலையிலிருந்து இரத்தம் சிந்தியவரே! ஸ்தோத்திரம்
18. கைகளிலிருந்து இரத்தம் சிந்தியவரே! ஸ்தோத்திரம்
19. கால்களிலிருந்து இரத்தம் சிந்தியவரே! ஸ்தோத்திரம்
20. கெத்சமெனேயில் இரத்த வேர்வை சிந்தியவரே! ஸ்தோத்திரம்
21. பாடுபட்டு மரித்தவரே! ஸ்தோத்திரம்
22. காயபட்டு மரித்தவரே! ஸ்தோத்திரம்
23. என் பாவத்தினிமித்தம் அடிபட்டவரே! ஸ்தோத்திரம்
24. என் பாவத்தண்டனைகளை ஏற்றுக் கொண்டவரே! ஸ்தோத்திரம்
25. எனக்கு நித்திய வாழ்வும், மீட்பும், விடுதலையும் கொடுக்கும்படியாய் ஜீவன் விட்டவரே! ஸ்தோத்திரம்

## ஜெபங்கள் தொடர்ச்சி

### 79. 5 வித பாவங்களிலிருந்து கர்த்தர் நமக்கு விடுதலை கொடுக்க ஜெபம்

பகை, இச்சை, பொறாமை, பெருமை, சோம்பல், இந்த - 5 பாவங்களையும் என்னை விட்டு மாற்றும். உம் வலது கையிலுள்ள காயத்தை நோக்கிப் பார்க்கிறேன். இச்சை என்னும் பாவம் என்னில் இருக்கிறதா என்பதை சோதித்துப் பார்க்கிறேன். உம் இடது கையிலுள்ள காயத்தை நோக்கிப் பார்க்கிறேன். பகை என்னும் சுபாவம் எனக்குள் காணப்படுகிறதா என்பதை சோதித்துப் பார்க்கிறேன். உம் வலது

காலுள்ள காயத்தை நோக்கிப் பார்க்கிறேன். பொறாமை உள்ளதா என்பதை பார்க்கிறேன். உம் இடது காலுள்ள காயத்தை நோக்கிப் பார்க்கிறேன். பெருமை எனங்கிற சுபாவம் எனக்குள் காணப்படுகிறதா என்பதை சோதித்துப் பார்க்கிறேன். உம் தலையிலுள்ள காயத்தை நோக்கிப் பார்க்கிறேன். 'சோம்பல்' என்னும் சுபாவம் என்னில் இருக்கிறதா என்பதை சோதித்துப் பார்க்கிறேன். இந்த 5 பாவங்கள் மேல் எனக்கு வெறுப்பு தாரும். என்னை உமக்கு முன்பாக ஆராய்ந்து பார்க்கிறேன். உம் வசனத்திலே, வெளிச்சத்திலே என் ஆத்துமாவை ஆராய்ந்து கழுவும்படியாக உம் கரத்திலே கொடுக்கிறேன். கழுவப்பட்டும், மறுபடியும் மறுபடியும் இப்படிபட்ட பாவங்களை செய்கிற ஆத்துமாவாக அல்ல, கறை, திரை, குறை இல்லாத பரிசுத்த மணவாட்டிகளாக எம்மை மாற்றும். என் ஆத்துமாவை முற்றிலும் மாற்றும்படி உம் கரத்தில் கொடுக்கிறேன். கறைபடிந்த என் ஆத்துமாவை முற்றிலும் உம் இரத்தத்தால் கழுவும். மன்னிக்கிற சுபாவம், தாழ்மை, இச்சையடக்கம், அன்பு, சுறுசுறுப்பு ஆகியவைகளைத் தாரும், ஆமென்.

**80. சமாதானத்திற்காக ஜெபம்!**

சமாதானத்தை விரும்புகிறவனாய், சமாதானத்தை போதிக்கிறவனாய், என்னை மாற்றும். சண்டை போடாதவனாய், குழப்பம் உண்டாக்காதவனாய் என்னை மாற்றும். சமாதான காரணரே! சமாதானத்தை வைத்துப் போனவரே! எங்களுக்குள், எங்கள் வீட்டுக்குள், எங்கள் ஊருக்குள், தமிழ் நாட்டில், இந்தியாவில், உலகமெங்கிலும் சமாதானத்தை வைப்பீராக, உம் நிறைவான சமாதானத்தை வைப்பீராக, சமாதானத்துக்கு விரோதமான எல்லா பிசாசின் வல்லமைகளையும் உம் அக்கினியால் சுட்டெரிப்பீராக. பிரிவினை, கசப்பு, வெறுப்பு, பகை, பொல்லாத சிந்தனைகள் உண்டு பண்ணுகிற பொல்லாத ஆவிகளை கட்டி பூட்டி ஜெபிக்கிறோம். உம் நிறைவான சமாதானம் எங்கள் இதயங்களிலே தருவீராக. சமாதானத்தைக் கெடுக்கிற எல்லா தீமைகளையும், சூழ்நிலைகளையும் என்னை விட்டு மாற்றும்.

**81. கர்த்தர் நீதியின் செங்கோலை அனுப்பி, நீதி நமக்கு செய்யும்படி, ஜெபம் (எண் 24)**

நீதியின் செங்கோலை உடையவரே! உம் வலது கரத்திலுள்ள நீதியின் செங்கோலை அனுப்புவீராக. அது மோவாபின் எல்லைகளை நொறுக்குவதாக. அந்த செங்கோல் சகல சாத்தானின், சத்துருக்களின் அதிகாரங்களை முற்றிலும் நொறுக்கிப் போடுவதாக; நிர்மூலமாக்குவதாக, உம் பிள்ளைகளை விடுவித்து, காத்துக் கொள்வீராக.

**82. தீராத வியாதிகளை கர்த்தர் குணமாக்க ஜெபம்**

18 வருஷம் வியாதியாயிருந்த பெலவீனபடுத்தும் ஆவியை

யுடைய ஸ்திரீயை குணமாக்கினீரே! 38 வருஷம் திமிர்வாதமாயிருந்த வியாதியஸ்தனை குணமாக்கினீரே! தீராத வியாதிகள் தீர்க்கிற நல்லவரே! உம் இரத்தத்திற்காய் ஸ்தோத்திரம். உம் தழும்புகளுக்காய் ஸ்தோத்திரம். சிலுவையிலே நீர் சுமக்காத வியாதி எதுவும் இல்லையே! ஆண்டவரே! உம் இரத்தத்தை நாங்கள் விசுவாசிக்கும் போது தீராத பிணிகள் தீர்வதாக. உம் தழும்புகளால் குணமானோம் என விசுவாசிக்கச் செய்யும். பிணியாளிகளை குணமாக்கும் உம் வல்லமை எங்கள் மேல் பரிபூரணமாய் இறங்குவதாக. உம் கரம் எம்மைக் குணமாக்குவதாக. உம் தழும்புகளாலும், இரத்தத்தாலும் எம்மை முற்றிலும் குணமாக்கும். கர்த்தாவே! நீர் என்னை குணமாக்கினபடியால் ஸ்தோத்திரம், ஆமென்.

## 83. துன்மார்க்கர் கரத்திருந்து விடுவிக்கும்படி ஜெபம்

கர்த்தாவே! துன்மார்க்கருக்கும், பொல்லாத ஜனங்களின் அடக்கு முறைகளுக்கும் விலக்கும். அடிமைத் தனத்தினால் சிக்கித் தவிக்கும் ஜனங்களுக்காக ஜெபிக்கிறோம். சத்துருக்கள் கரத்திருந்து ஆண்டவர் தமது வலது கரத்தினால் விடுவிப்பீராக. பொல்லாத ஜனங்களின் கைகளிருந்து மீட்டுக் கொள்வீராக. மறுபடியும் அவர்கள் தொடாதபடிக்கு உம் இரத்தத்தால் வேஅடைப்பீராக. உம் வலது கரத்திற்குள் உம் பிள்ளைகளை வைத்துக் கொள்ளும். உம் உள்ளங்கையில் வரைந்து கொள்வீராக. உம் பிள்ளைகளின் மதில்கள் எப்பொழுதும் உமக்கு முன்பாக இருப்பதாக. உம் இரத்தக் கோட்டைக்குள்; உம் அக்கினி மதிலுக்குள், உம் நிழலுக்குள் மூடி மறைப்பீராக. சகல பொல்லாத ஜனங்களுக்கும் விலக்கி காத்துக் கொள்ளும், ஆமென்.

## 84. தேவனின் ஆசீர்வாதம் பெற ஜெபம்

கர்த்தாவே! மனிதன் எங்களை ஆசீர்வதிக்க முடியாது. நீர் எங்களை ஆசீர்வதிக்க வல்லவர். ஆசீர் எங்கிருந்தும் வராது. உம்மிடமிருந்து மட்டுமே வரும். அதை விசுவாசிக்கிறோம். கர்த்தாவே! தேவ சபையிலே தேவன் எழுந்தருளுவீராக. எம் மேல் வந்த சாபங்களை ஒழித்து ஆசீர்வதிக்கும்படி எழுந்தருளும். கட்டுகளை உடைக்கும்படி எழுந்தருளும். தீராத வியாதிகளை தீர்க்கும்படி எழுந்தருளும். மருந்து எடுத்தாலும், எடுக்காவிட்டாலும் குணமாக்குபவர் நீரல்லவோ ஆண்டவரே! என் சரீரத்தை உம் கரத்திலே கொடுக்கிறேன். தீராத வியாதியுள்ள பகுதியை உம்மிடம் ஒப்படைக்கிறேன். அந்த பகுதியைத் தொடும் ஆண்டவரே! இது வரை குணமாகாமல் இருந்த அந்த வியாதி உம் கரத்தினால், உம் தழும்புகளால், உம் வல்லமையால், உம் இரத்தத்தால், உம் அக்கினியால் கிருபையாய் குணமாக்கும் கர்த்தாவே! இதோ ஆசீர்வதிக்க வாரும்.

என் பாவங்களால் வந்த சாபங்கள், பிசாசால் வந்த சாபங்கள், கொடிய பாவிகளால் வந்த சாபங்கள், காரணமுள்ள சாபங்கள்,

காரணமில்லாத சாபங்கள் எல்லாம் மாற்றும். என் சாபங்களை சுமந்தவரே! என் சாபம் போக்க சாபமானவரே! எனக்கு சாபம் அல்ல, உம் ஆசீர் உண்டாவதாக, 'சாபம்' என்னும் இருள், 'ஆசீர்' என்னும் வெளிச்சத்தினால் முற்றிலும் மறைவதாக. உம்மால் ஆசீர் உண்டாவதாக.

வாழ்விலும், தாழ்விலும் உம்மை நேசிப்போம், உமக்கு கீழ்படிவோம், உம் வாக்குத்தத்தங்களை அற்பமாக எண்ணமாட்டோம். உம் கிருபைக்கு காத்திருப்பதை அற்பமாக எண்ணமாட்டோம். தேவ சமுகத்திற்கு வருவதை அற்பமாக எண்ணமாட்டோம். உமக்கு பிரியமில்லாத ஜீவியத்தை மாற்றுவோம். விழித்திருந்து, காத்திருந்து, உபவாசித்து, ஜெபிப்போம். பொருளாசை, பேராசைகளை விட்டு விடுவோம். போதுமென்கிற மனதோடு இருப்போம். உம் ஆசீர் எனக்கு எல்லா காரியத்திலும் கிடைப்பதாக. கையிட்டு செய்யும் வேலைகளை ஆசீர்வதியும், வேலைகளைச் செய்ய பெலன் தாரும். வேலையில் சந்தோஷம் தாரும். உற்சாகத்தோடு வேலை செய்ய உதவி செய்யும். எங்கள் பிரயாசத்திற்கேற்ற பலன் தாரும். எங்கள் பிரயாசங்களை ஆசீர்வதியும், வீண் நஷ்டங்களை மாற்றும். சத்துரு என் வேலைகளை தொடாதபடி உம் ஆசீர் எம் வேலைகளில் இருப்பதாக. அந்த ஆசீர்களை மற்றவர்கள் கொள்ளையடித்து கொண்டு போகாதபடி ஆண்டவரே தடை செய்வீராக.

என் பிரயாசங்களினால் எனக்கு நன்மை உண்டாவதாக! அந்த நன்மையினால் தேவ சித்தமுள்ள மற்றவர்களுக்கும், ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும் நன்மை உண்டாவதாக. நீர் எனக்கு தரும் நன்மையினால் சத்திய சுவிசேஷம் அறிவிக்கப்படுவதாக. ஆத்துமாக்களுக்கு பிரயோஜனம் உண்டாவதாக. நீர் எனக்கு தரும் நன்மைகளினால் தேவ ராஜ்யம் கட்டியெழுப்பப் படுவதாக. நீர் ஐசுவரிய சம்பன்னராக இருக்கிறீர். ஐசுவரியத்தை சம்பாதிக்க பெலன் தருபவர் நீரே! ஐசுவரியம் உம் கரத்திருந்து எமக்குக் கிடைப்பதாக. ஐசுவரியத்தினால் எனக்கு திருப்தியும், நிறைவும், சந்தோஷமும் தாரும். என்னை கழுவி சுத்திகரித்து ஆசீர்வதியும், என்னை போஷியும், நடத்தும். என்னை ஆற்றும், தேற்றும், அரவணைத்துக் கொள்ளும், ஒவ்வொரு நாளும், ஏந்தி, சுமந்து, தப்புவியும். ஜெயம் எல்லா காரியங்களிலும் உம்மிடமிருந்து வருவதாக. ஆமென்.

**85. உம் நிமித்தம் வரும் பாடுகளை சகிக்க பெலன் தாரும்**

1. எமக்காய் வாரினால் அடிக்கப்பட்டவரே (யோவா 19/1)
2. எமக்காய் பரியாசம் பண்ணப்பட்டவரே (லூக். 22/63)
3. எமக்காய் மனுஷர் கையிலே பிடிக்கப்படும்படி ஒப்புக் கொடுக்கப்பட்டவரே (லூக். 22/63)
4. எமக்காய் கண்கள் கட்டப்பட்டவரே (லூக். 22/64)

5. எமக்காய் முகத்தில் அறையப்பட்டவரே (லூக். 22/64)
6. எமக்காய் தூஷிக்கப்பட்டவரே (லூக். 22/65)
7. எமக்காய் (3 தரம்) மறுதலிக்கப்பட்டவரே (லூக். 22/57) (மாற்கு 14/72)
8. எமக்காய் காட்டிக் கொடுக்கப்பட்டவரே (லூக். 22/48)
9. எமக்காய் சபிக்கப்பட்டவரே (மத். 26/74)
10. எமக்காய் (ஆத்துமா இரட்சிக்கப்பட) துக்கப்பட்டவரே (மத். 26/37)
11. எமக்காய் வியாகுலப்பட்டவரே (மத். 26/37)
12. எமக்காய் மரணத்துக்கேதுவான துக்கம் ஆத்துமாவில் கொண்டவரே (மத். 26/38)
13. எமக்காய் மனுஷனால் தாழ்த்தி தண்டனைகளை வாங்கியவரே (மத். 26/39)
14. எமக்காய் தூதர் உதவியும் வேண்டாம் என்றிருந்தவரே (மத். 26/53)
15. எமக்காய் கள்ளனைப் பிடித்தது போல பிடிக்கப்பட்டவரே(மத்.26/55)
16. எமக்காய் எல்லாராலும் கைவிடப்பட்டவரே (மத். 26/56)
17. எமக்காய் பொய்சாட்சி சொல்லப்பட்டவரே (மத். 26/60)
18. எமக்காய் முகத்தில் துப்பப்பட்டவரே (மத். 26/67)
19. எமக்காய் தலையில் குட்டப்பட்டவரே (மத். 26/67)
20. குற்றமில்லாதவராயிருந்தும் எமக்காய் குற்றவாளியானவரே (மத். 27/4)
21. எமக்காய் பிலாத்துவால் கைகழுவப்பட்டவரே (மத். 27/24)
22. எமக்காய் சிவப்பங்கி உடுத்தப்பட்டவரே (மத். 27/29)
23. எமக்காய் இரண்டு தரம் துப்பப்பட்டவரே (மத். 27/30)
24. எமக்காய் முள்முடி சூட்டப்பட்டவரே (மத். 27/29)
25. எமக்காய் முடிமேல் கோலால் அடிக்கப்பட்டவரே (மத். 27/30)
26. எமக்காய் கசப்பான காடியை ருசிபார்த்தவரே (மத். 27/34)
27. எமக்காய் யாவும் சகித்தவரே!
28. எமக்காய் வஸ்திரங்கள் பங்கிடப்பட்டவரே (மத். 27/35)
29. எமக்காய் உடை பேரில் சீட்டுபோடப்பட்டவரே (மத். 27/35)
30. எமக்காய் கள்ளர் நடுவிலே கள்ளன் பட்டம் சூட்டப்பட்டவராய் தொங்கியவரே (மத். 27/38)
31. எமக்காய் சிலுவையில் அறையப்பட்டவரே (மத். 27/35)
32. சிலுவையிலறையப்பட்டபின்னும் தூஷிக்கப்பட்டவரே (மத். 27/40)
33. சிலுவையிலறையப்பட்டபின்னும் பரிகசிக்கப்பட்டவரே (மத். 27/41)
34. கள்ளராலும் நிந்திக்கப்பட்டவரே (மத். 27/44)
35. தேவனால் எமக்காய் கைவிடப்பட்டவரே (மத். 27/46)
36. தேவனால் பாவி என்று எண்ணப்பட்டவரே (மத். 27/46)
37. தேவனால் பாவி என்று உதறப்பட்டவரே (மத். 27/46)
38. தேவனிடமிருந்து எம் நிமித்தம் பிரிந்தவரே (மத். 27/46)
39. எம் நிமித்தம் பாவியாக ஒப்புக்கொடுத்தவரே (மத். 27/46)

**40.** கடற்காளான் தோய்த்த காடியை ருசிபார்த்தவரே (மத். 27/48)
**41.** எமக்காய் எத்தன் என்னப்பட்டவரே (மத். 27/63)
**42.** எமக்காய் மரித்தபின்னும் காக்கப்பட்டவரே (மத். 27/65)
**43.** எமக்காய் மனுஷனாய்த் தாழ்த்தி சிலுவை மரணம் வரப்போகிற தினிமித்தம் திகிலடைந்தவரே (மாற்கு 14/33)
**44.** எமக்காய் ஜெப உதவியுமில்லாதவராய் காணப்பட்டவரே (மாற்கு 14/34-41)
**45.** எமக்காய் வேலைக்காரராலும் கன்னத்தில் அறையப்பட்டவரே (மாற்கு 14/65)
**46.** எமக்காக பேதுருவால் மறுதலிக்கப்படும்படியாக சத்தியம் செய்யப்பட்டவரே (மாற்கு 14/71)
**47.** எமக்காக பொறாமையினால் ஒப்புக்கொடுக்கப்பட்டவரே (மாற்கு 15/9)
**48.** எமக்காய் பரியாசமாய் வணங்கப்பட்டவரே (மாற்கு 15/19)
**49.** பாரசிலுவையை சுமந்தவரே (மாற்கு 15/21) (யோவான் 19/17)
**50.** எமக்காய் அக்கிரமக்காரரில் ஒருவராய் எண்ணப்பட்டவரே (மாற்கு 15/28)
**51.** எமக்காய் மகாசத்தமாய் கூப்பிட்டவரே (இரட்சிப்புக்காக) (மாற்கு 15/37)
**52.** எமக்காய் ஜீவனை விட்டவரே (மாற்கு 15/37)
**53.** எமக்காய் பிலாத்துவுக்கு முன்பாக (தேசாதிபதிக்கு) கொண்டு போகப்பட்டவரே! (மத். 27/19)
**54.** எமக்காய் நியாயாசனம் வரை சென்றவரே (மத். 27/19)
**55.** எமக்காய் ஜனங்களால் கைவிடப்பட்டவரே (மத். 27/23)
**56.** எமக்காய் ஜனங்களால் வெறுக்கப்பட்டவரே (மத். 27/23)
**57.** எமக்காய் சொந்த ஜனங்களால் வெறுக்கப்பட்டவரே (மத். 27/25)
**58.** எமக்காய் சொந்த ஜனங்களால் கைவிடப்பட்டவரே (மத். 27/25)
**59.** போர்சேவகர் கூட்டம் முழுமைக்கு முன் வஸ்திரங்கள் கழற்றப்பட்டு சிவப்பு மேலங்கி உடுத்தப்பட்டவரே! (மத். 27/27,28)
**60.** ராஜமுடி உடைய உமக்கு முள்முடி சூட்டப்பட்டதே, (எமக்காய் இப்பாடை சகித்தவரே! (மத். 27/29)
**61.** செங்கோலுக்குப் பதில் கோல் கொடுக்கப்பட்டவரே (மத். 27/29)
**62.** யூதரின் ராஜாவே என்று பரியாசம் பண்ணப்பட்டவரே (மத். 27/29)
**63.** சிரசில் அடிவாங்கியவரே (மத். 27/29)
**64.** சிரசில் இருந்தும் இரத்தம் சிந்தியவரே (மத். 27/29)
**65.** கெத்சமனேயில் எமக்காய் இரத்த வேர்வை சிந்தியவரே (லூக். 22/44)
**66.** கெத்சமனேயில் எமக்காய் பாடுப்பட்டு மிகவும் வியாகுலப்பட்டு மக்கள் இரட்சிப்புக்காக ஜெபித்தவரே (லூக். 22/44)
**67.** கெத்சமனேயில் எமக்காய் அதிக ஊக்கமாய் ஜெபித்தவரே (லூக். 22/44)
**68.** கெத்சமனேயில் எமக்காய் பெலவீனப்பட்டவரே (லூக். 22/43)
**69.** கெத்சமனேயில் பலத்தசத்தத்தோடு எமக்காய் ஜெபித்தவரே (எபி. 5/7)

70. கெத்சமனேயில் கண்ணீரோடு எமக்காய் பரிந்து பேசியவரே (எபி. 5/7)
71. எமக்காய் முத்தத்தால் காட்டிக் கொடுக்கப்பட்டவரே (லூக். 22/47)
72. எமக்காய் ஆலோசனை சங்கம் சென்றவரே (லூக். 22/66)
73. எமக்காய் கலகக்காரன் பட்டம் சூட்டப்பட்டவரே (லூக். 23/2)
74. எமக்காய் உபதேசம் பண்ணி கலகப்படுத்துகிறான் என்று சொல்லப்பட்டவரே (லூக். 23/5)
75. எமக்காய் பிரதான ஆசாரியராலும் வேதபாரகராலும் வெறுக்கப்பட்டவரே மூப்பராலும் (மத். 27/20)
76. ஏரோது ராஜாவால் நிந்திக்கப்பட்டவரே (எமக்காய்) (லூக். 23/11)
77. ஏரோது ராஜாவால் எமக்காய் பரியாசம் பண்ணப்பட்டவரே(லூக். 23/11)
78. எமக்காய் மினுக்கான வஸ்திரம் தரிப்பிக்கப்பட்டு பரியாசம் பண்ணப்பட்டவரே (லூக். 23/11)
79. எமக்காய் ஜனங்கள் இஷ்டத்துக்கு விடப்பட்டவரே (லூக். 23/25)
80. எமக்காய் அழவேண்டாம் என்று சொன்னவரே (லூக். 23/28)
81. பச்சை மரமாயிருந்தும் எமக்காய் பாடுபட்டவரே (லூக். 23/31)
82. சிலுவையிலும் எமக்காகப் (பாவிகளுக்காக பரிந்து பேசியவரே! (லூக். 23/34)
83. பாவிகளுக்காகப் பரிந்து பேசுபவரே! (லூக். 23/34)
84. எமக்காய் பிதாவிடம் ஆவியை ஒப்புவித்தவரே (லூக். 23/46)
85. எமக்காய் கைகள், கால்களில் காயங்கள் பட்டவரே (லூக். 24/39)
86. எமக்காய் பிரதான ஆசாரியனின் சேவகனால் அறையப்பட்டவரே (யோ. 18/22)
87. காய்பா (பிரதான ஆசாரியன்) விடம் கட்டப்பட்டவராய் அனுப்பப்பட்டவரே (எங்களுக்காய்) (யோ. 18/24)
88. எங்களுக்காய் பிரதான ஆசாரியனிடம் கொண்டு போகப்பட்டவரே (யோ. 18/24)
89. எமக்காய் சொந்த ஜனங்களாலும், பிரதான ஆசாரியராலும், பிலாத்துவிடம் (தேசாதிபதி) ஒப்புக்கொடுக்கப்பட்டவரே! (யோ. 18/35)
90. எமக்காய் கையினால் அடிக்கப்பட்டவரே (யோ. 19/3)
91. எமக்காய் அதிகாரமுள்ளவராயிருந்தும் அதிகாரம் இல்லாதவர் போல் இருந்தவரே (லூக். 19/11)
92. எமக்காய் சிலுவையில் யாவும் செய்து முடித்தவரே (யோ. 19/30)
93. எமக்காய் எல்லாம் முடித்த பின்னர் சிலுவையில் தலைசாய்த்தவரே! (யோ. 19/30)
94. எமக்காய் பெலவீனராய் மாறியிருந்தபடியால் (கெத்சமனேயில் இரத்தம் வடித்து மற்றவர்களை விட சீக்கிரம் மரித்தவரே (யோ. 19/33)
95. ஈட்டியால் விலாவில் (எமக்காய்) குத்தப்பட்டவரே (யோ. 19/34)

96. ஈட்டியால் குத்தப்பட்டபடியால் இருதயத்தின் இரத்தத்தையும் (எமக்காய்) சிந்தியவரே (யோ. 19/34)
97. ஈட்டியால் குத்தப்பட்டபடியால் எமக்காய் இரப்பையின் தண்ணீரையும் சிந்தியவரே (யோ. 19/34)
98. அன்பு சீஷன் (யோவான்) கண் காணும்படியாக எமக்காய் ஈட்டியால் குத்தப்பட்டவரே (யோ. 19/35)
99. எமக்காய் கைகளில் தழும்புகள் (ஓட்டை) உள்ளவரே (யோ. 20/27)
100. எமக்காய் கால்களில் தழும்புகள் (ஓட்டை) உள்ளவரே (யோ. 20/27)
101. எமக்காய் விலாவில் தழும்புகள் (ஓட்டை) உள்ளவரே (யோ. 20/27)
102. எமக்காய் முதுகின் மேல் உழப்பட்டவரே (சங். 129/3)
103. எமக்காய் புறஜாதியாரிடத்தில் ஒப்புக் கொடுக்கப்பட்டவரே (மத். 20/19)
104. எமக்காய் சிலுவையிலே சாத்தானோடு யுத்தம் பண்ணியவரே (ஏசாயா. 53/2)
105. எமக்காய் சிலுவையில் குதிங்கால் நசுக்கப்பட்டவரே (ஆதி. 3/15)
106. எமக்காய் அழகில்லாதவராய் மாறியவரே! (ஏசாயா. 53/2)
107. எமக்காய் சௌந்தரியமில்லாதவராய் மாறியவரே (ஏசாயா. 53/2)
108. எமக்காய் விரும்பத்தக்க ரூபமில்லாதவராய் மாறியவரே (ஏசாயா. 53/2)
109. மனுஷரைப் பார்க்கிலும் முகப்பார்வை அந்தக் கேட்டைடைந்தவரே (எமக்காய்) (ஏசாயா. 52/14)
110. மனுபுத்திரரைப் பார்க்கிலும் ரூபமானது அந்தக்கேடடைந்தவரே (ஏசாயா. 52/14)
111. அநேகர் பிரமிக்கத்தக்க அளவு எமக்காய் அந்தக்கேடடைந்தவரே (ஏசாயா. 52/14)
112. எமக்காய் அசட்டை பண்ணப்பட்டவரே (ஏசாயா. 53/3)
113. எமக்காய் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரே (ஏசாயா. 53/3)
114. எமக்காய் துக்கம் யாவும் சிலுவையில் சுமந்தவரே (ஏசாயா. 53/3,4)
115. எம் பாடுகள் எல்லாம் சிலுவையில் சுமந்தவரே (ஏசாயா. 53/3,4)
116. எமக்காய் அநேகரால் முகங்கள் மறைக்கப்பட்டவரே (ஏசாயா. 53/3)
117. எமக்காய் சொந்த சீஷர்களாலும் அசட்டை பண்ணப்பட்டவரே (ஏசாயா. 53/3)
118. எமக்காய் ஜனங்களால் எண்ணப்படாமல் போனவரே (ஏசாயா. 53/4)
119. எமக்காய் தேவனால் அடிபட்டவர் என்ற நிந்தையைப் பெற்றவரே (ஏசாயா. 53/4)
120. எமக்காய் தேவனால் வாதிக்கப்பட்டவர் எறை நிந்தையைப் பெற்றவரே (ஏசாயா. 53/4)
121. தேவனால் சிறுமைப்படுத்தப்பட்டவர் என்ற நிந்தையை எமக்காய் சுமந்தவரே (ஏசாயா. 53/4)
122. எம்முடைய மீறுதல்கள் நிமித்தம் சிலுவையில் காயப்பட்டவரே (ஏசாயா. 53/5)

**123.** எம்முடைய அக்கிரமங்கள் நிமித்தம் நொறுக்கப்பட்டவரே (ஏசா. 53/5)

**124.** எங்களுக்கு சமாதானம் உண்டுபண்ணும் ஆக்கினையெல்லாம் சுமந்தவரே (ஏசாயா. 53/5)

**125.** தழும்புகளால் எம்மைக் குணமாக்கும்படியாக (சுகமாக்கும்படி) காயப்பட்டு தழும்புகளைப் பெற்றவரே (ஏசாயா. 53/5)

**126.** தழும்புகளால் குணமாக்கியவரே (ஏசாயா. 53/5)

**127.** தழும்புகளால் குணமாக்குபவரே (ஏசாயா. 53/5)

**128.** தழும்புகளால் குணமாக்குகிறவரே (ஏசாயா. 53/5)

**129.** இரத்தத்தால் குணமாக்கியவரே (ஏசாயா. 53/5)

**130.** இரத்தத்தால் குணமாக்குபவரே (ஏசாயா. 53/5)

**131.** இரத்தத்தால் குணமாக்குகிறவரே (ஏசாயா. 53/5)

**132.** எல்லாருடைய அக்கிரமத்தின் தண்டனையையும் தம் மேல் ஏற்றுக் கொண்டவரே (ஏசாயா. 53/6)

**133.** எமக்காய் நெருக்கப்பட்டவரே (ஏசாயா. 53/7)

**134.** எமக்காய் ஒடுக்கப்பட்டவரே (ஏசாயா. 53/7)

**135.** எமக்காய் அடிக்கப்படும் ஆட்டுக்குட்டி போல் அடிக்கப்பட்டவரே (ஏசாயா. 53/7)

**136.** எமக்காய் மயிர்க்கத்தரிக்கிறவன் முன் சத்தமிடாத ஆட்டைப்போல
a) வாயைத் திறவாதபடி
b) பயமுறுத்தாதபடி
c) அதிகாரம் இல்லாதவர் போல சிலுவையில் பாடுகள் சகித்தவரே (ஏசா 53/7)

**137.** எமக்காக ஜீவனுள்ளோர் தேசத்தில் இருந்து அறுப்புண்டு போனவரே (ஏசாயா. 53/8)

**138.** எம் மீறுதல் நிமித்தம் வாதிக்கப்பட்டவரே (ஏசாயா. 53/8)

**139.** எமக்காய் பிதாவால் நொறுக்கப்பட்டவரே (ஏசாயா. 53/10)

**140.** எமக்காய் பிதாவால் பாடுகளுக்குட்படுத்தப்பட்டவரே (ஏசா. 53/10)

**141.** எமக்காய் குற்றநிவாரண ப□ாய் ஒப்புக்கொடுத்தவரே (ஏசா. 53/10)

**142.** எமக்காய் ஆத்துமாவை வருத்தப்படுத்தியவரே (ஏசாயா. 53/11)

**143.** எமக்காய் ஆத்துமாவை மரணத்தில் ஊற்றியவரே (ஏசாயா. 53/11)

**144.** அக்கிரமக்காரர்களுக்காய் (அவர்கள் இரட்சிப்புக்காய்) வேண்டிக் கொண்டவரே (ஏசாயா. 53/12)

**145.** எமக்காய் சாபமானவரே (கலா. 3/13)

**146.** எம் பெலவீனங்களை எல்லாம் சுமந்தவரே (மத். 8/17)

**147.** எமக்காய் அவமான சின்னத்தில் அவமானப்படுத்தப்பட்டவரே (கலா. 3/13)

**148.** எமக்காய் தம்மை தேவனுக்கு சுகந்தவாசனை காணிக்கையாக ஒப்புக்கொடுத்தவரே (எபே. 5/2)

**149.** எமக்காய் தம்மை தேவனுக்கு ப□ாக ஒப்புக்கொடுத்தவரே (எபே. . 5/2)

**150.** சபைக்காகத் தம்மைத் தாமே ஒப்புக்கொடுத்தவரே (எபே. 6/27)

இந்த 150 பாடுகளையும் எமக்காகப்பட்டவரே! உமக்காக, உம் நாமத்திற்காக, உம் சுவிசேஷத்திற்காக நாங்கள் பட்ட பாடுகள் கொஞ்சமே! பாடுகளில் உம் கிருபையும், பெலனும், கரமும், அன்பும், எம்மைத் தாங்குவதாக. ஆமென்.

**86. உயிரோடு மரித்தவனாக அல்ல, உமக்காக மரிப்பவனாக்கும்**

1. கர்த்தாவே! விசுவாசத்தை துவக்கியவரே! நான் **உமக்குள் மரிக்கச்** செய்யும். முடிவுபரியந்தம் நிலைநிற்கச் செய்யும். (எபி.9/27) (1கொரி15/18) (எபி.11/21) (அப்.7/59)
2. உம்முடைய நாமத்திற்காக அநுதினமும் சாகவும் ஆயத்தம் உள்ளவனாய் பக்தியில் பெருகப்பண்ணும் (1கொரி 15/31,32,36) (ரோமர் 12/1) (மத்.10/39) (பி1/21) (II கொரி 11/23)
3. கர்த்தாவே! என் **பாவத்தில் சாகாதபடி** பாதுகாரும் (யோ. 8/24)
4. **பாவத்துக்கு மரித்த**வனாக மாற்றும் (ரோமர். 6/2)
5. உலக சிநேகம் உள்ளவனாய், சுகபோகம் உள்ளவனாய் மாறிப் போகாதபடி காத்தருளும். **உயிரோடு செத்தவனாய்** மாறிவிடாதபடி காத்தருளும். உயிருள்ளவனாயிருந்தும் செத்தவனாய் இல்லாதபடி காத்தருளும். கிரியைகளில் பெருகப்பண்ணும் (வெளி. 3/1) (1தீமோ 5/6)
6. **இரண்டாம் மரண**த்திற்கு (அக்கினிக் கடலுக்கு) தப்புவியும் (வெளி. 21/8)

பாவத்தில் மரித்தவனாக அல்ல, உயிரோடு மரித்தவனாக அல்ல,
பாவத்துக்கு மரித்தவனாக, உமக்காக மரிப்பவனாக,
உமக்குள் மரிப்பவனாக ஆசீர்வதியும்

**87. இவைகளில் எல்லாம் தப்புவியும்**

1. **மரணவாசல்** : பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத் தக்கதான வருத்தத்திலே எம்மைத் தப்புவியும். அப்படிப்பட்ட மரணத்திருந்து தப்புவித்தவரே! இப்பொழுதும் தப்புவிப்பவரே! இன்றும் தப்புவியும். (IIகொரி 1/7-10)
2. **எல்லாத்தீமை** : எல்லாத் தீமையினின்றும் என்னை இரட்சியும் (IIதீமோ 4/18)
3. **சோதனை** : தேவபக்தியுள்ளவர்களை சோதனையினின்று இரட்சியும் (IIபே 2/9)
4. **சிங்கம்** : சிங்கத்தின் வாயினின்றும் இரட்சியும் (IIதீமோ 4/17)
5. **துஷ்டமிருகங்கள்** : இவைகளுக்குத் தப்புவியும் (Iகொரி 15/32) (மாற் 1/13)
6. **இருளின் அதிகாரம்** : இதிருந்து முழுமையாக விடுவியும். உம் ராஜியத்திற்கு உட்படுத்தும் (கொலோ 1/13)

7. **உம் நாமத்தினிமித்தம் வரும் கட்டுகள், காவல்கள்** (2 தீமோ 3/11) (அப்போஸ்தலர் 20/23)

**88. சாத்தானை மேற்கொள்பவர்களாக்கும் :**

1. கர்த்தாவே! இரவும் பகலும் எம் மேல் குற்றம் சுமத்தும்படி குற்றம் சாட்டுகின்ற பிசாசானவன் குற்றம் பிடிக்கக்கூடாதபடிக்கு என்னைப் பூரணமாய் பரிசுத்தப்படுத்தும் (வெளி 12/10)
2. கர்த்தாவே! சோதனைக்காரனின் சோதனைகளில் விழாதபடி உம் கிருபையைப் பெற்றுக் கொள்பவனாக, பற்றிக் கொள்பவனாய் என்னை மாற்றும் (மத் 4/3)
3. கர்த்தாவே! பிசாசானவன் என் எதிராளி என்பதைக் குறித்த அறிவோடு அவன் வலைகளில், தந்திரங்களில் சிக்கிக் கொள்ளாதபடி ஞானமாகச் செயல்படச் செய்யும். உம் மிகுந்த கிருபையினால் அவனுடைய சதிகளுக்கும் கண்ணிகளுக்கும் தப்பிக்கொள்ளச் செய்யும் (1பே 5/8)
4. சாத்தான் - வெளி 20/2, யோபு 1/6<br>பெயல்செபூல் - மத் 12/24<br>பே யா ள் - 2கொரி 6/15<br>பிசாசு - வெளி 20/2<br>என்னை மேற்கொள்ளாதபடி அதை நான் மேற்கொள்ளத்தக்கதாக எனக்குள் உம் ஆவிவல்லமை, அக்கினி வல்லமை, வார்த்தை வல்லமைகளைப் பெருகப்பண்ணும்.
5. பிசாசின் திருடுகிற காரியங்கள், கொல்லுகிற காரியங்கள், அழிக்கிற காரியங்கள் ஒன்றும் மேற்கொள்ளாதபடி உம் பரிபூரண ஜீவனால் நிரப்பும் (யோ 10/10)

**89. சபைக்கடுத்த ஐக்கியங்களில் நிலைநிறுத்தும்**

1. கர்த்தாவே! சபையிலே ஒருவரையும் குற்றவாளிகளாகத் தீர்க்காதபடி ஞானமாய் பேச, செயல்பட கற்றுத்தாரும். நீரே நியாயத் தீர்ப்பு செய்யும் (மத்.7/1) (யோ 5/22)
2. இரட்சிக்கப்படுகிறவர்களை அநுதினமும் சபையிலே சேர்த்தருளும். உம்மில் கனிகொடாத கொடி எதுவோ அதை அறுத்துப்போடும் (அப். 2/47) (யோவான் 15/2)
3. கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாகப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கை யாயிருந்து அவர்களை விட்டு விலகச் செய்யும் (1தீமோ 6/3,5) (ரோமர் 16/17,18)
4. வேதபுரட்டனாயிருக்கிற ஒருவனுக்கு இரண்டொருதரம் புத்தி சொன்னபின்பு அவன் செவி கொடுக்காத கட்டத்தில் அவனை விட்டு விலகப் பண்ணும் (தீத்து 3/10,11)

5. கர்த்தாவே! உம்முடைய உபதேசத்தைக் கொண்டு வராமல் வேறு உபதேசத்தைக் கொண்டு வருபவனை ஏற்றுக் கொள்ளாமல் இருக்கச் செய்யும் (II யோ 9/10,11)
6. சபைக்கும் செவிகொடாமல் சகோதரன் என்னப்பட்டவன் விரோதமாய் குற்றஞ்செய்தால் அவன் எனக்கு அஞ்ஞானியைப் போலிருப்பானாக. (மத். 18/17)
7. சகோதரன் என்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால் அவனோடு கலவாதிருக்கச் செய்யும், அவனோடு புசிக்காதிருக்கச் செய்யும். (1 கொரி 5/11)
8. ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் விட்டு விலகப் பண்ணும் (II தெச 3/6)
9. கானானியனில் ஒருவனும் கர்த்தருடைய ஆலயத்தில் இல்லாதபடி செய்யும் (சக 14/21)
10. கர்த்தாவே! பரிசுத்த ஸ்தலத்திற்கு போக்குவரவு செய்த துன்மார்க்கர் அடக்கம் பண்ணப்பட்டதைக் கண்டேன் என்ற வசனப்படி நியாயஞ்செய்யும் (பிரச 8/10)
11. கர்த்தாவே! இராப்போஜன ஐக்கியத்தில் அபாத்திரமாய் ஒருவனும் போஜனம் பண்ணாதபடி காத்தருளும். அன்பின் விருந்து கறைபடாதிருப்பதாக (யூதா 12)

**90. நியாயாதிபதியாக வெளிப்படும்**

1. கர்த்தாவே! உயிருள்ளோருக்கும் நியாயாதிபதியே! எமக்கு நியாயஞ்செய்யும்படி விழித்தருளும் (அப் 10/42)
2. கர்த்தாவே! நீதியுள்ள நியாயாதிபதியே! நீர் அவர்களுக்கு நீதியைச் சரிகட்டுகின்றதைப் பார்ப்பேனாக (எரேமியா 11/20)
3. கர்த்தாவே! சர்வலோக நியாயாதிபதியாய் நீதி செய்தருளும் (ஆதி.18/25)
4. யாவருக்கும் நியாயாதிபதியாகிய தேவனே! கிறிஸ்து மூலமாய் உம்மிடத்திலிருந்து எமக்கு எல்லா நியாயமும் கிடைப்பதாக (எபி 12/23)
5. கர்த்தாவே! நீர் நீடிய பொறுமையுடையவராய் காணப்பட்டாலும் மனந்திரும்பாத கட்டத்திலே முடிவிலே செம்மையாய் நியாயஞ்செய்வீர் என்பதை விசுவாசிக்கச் செய்யும் (மல் 2/17)
6. கர்த்தாவே! பார்வோனைத் தண்டித்தவரே! ஏரோதைத் தண்டித்தவரே! உம் கோபத்தை வைத்து வைத்துள்ளவரே! நீதியும் நியாயமும் உம் சிங்காசனத்தின் ஆதாரமல்லவோ? (சங் 89/14). தண்டியும்.
7. கர்த்தாவே! நியாயத்திற்கு ஜெயம் கிடைக்கப் பண்ணும் (மத் 12/20)
8. கர்த்தாவே! பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே! எங்கள் இரத்தத்தைக் குறித்து நியாயத்தீர்ப்பு செய்யும்; பழிவாங்கும் (வெளி 6/10)

## 91. கர்த்தர் எமக்காய் வார்த்தையால் யுத்தம் செய்வீராக

1. கர்த்தாவே! உம் வார்த்தை அரண்களை நிர்மூலமாக்குவதாக (IIகொரி 10/4)
2. தர்க்கங்களை நிர்மூலமாக்குவதாக (IIகொரி 10/5)
3. தேவனே! உம்மை அறிகிற அறிவுக்கு விரோதமாக எழும்புகின்ற எல்லா மேட்டிமைகள் நிர்மூலமாவதாக (IIகொரி 10/5)
4. கர்த்தாவே! உமக்கு விரோதமான எந்த எண்ணமும் உமக்கே கீழ்படிவதாக (IIகொரி 10/5)
5. கர்த்தாவே! இருபுறம் கருக்குள்ள உலகின் எந்த பட்டயத்தையும் வெட்டுவதாக (எபி 4/12)
6. கர்த்தாவே! கணுக்களை உருவக்குத்துவதாக, கணுக்களில் உள்ள வியாதிகள், கட்டுகள் யாவும் ஒழிவதாக (எபி 4/12)
7. கர்த்தாவே! உம் வார்த்தை உருவக்குத்துவதாக, ஊனில் உள்ள எல்லா வியாதி, பெலவீனம், சாபம், கட்டுகள் யாவும் மாறுவதாக. (எபி 4/12)
8. கர்த்தாவே! இருதயத்தின் யோசனைகளை, திட்டங்கள் (உமக்கு விரோதமான) யாவையும் சிதறப்பண்ணத்தக்கதாக, மாற்றிப் போடத் தக்கதாக, எமக்குச் சாதகமாக்கத்தக்கதாக உம் வார்த்தை கிரியை செய்வதாக (எபி 4/12)
9. கர்த்தாவே! இருதயத்தின் நினைவுகள் (உமக்கு விரோதமான எல்லா பழைய நினைவுகள்) யாவையும் குழப்பிப்போடும் (எபி 4/12)
10. மந்திர ஞானம், தந்திரம் ஞானம் யாவற்றையும் குழப்பிபோடும் (1 கொரி 3/20) (1 கொரி 1/20)

## 92. உம் நாமத்தின் வல்லமை இறங்குவதாக.

1. கர்த்தாவே! நீதிபரராக இருக்கிற இயேசுவே (Advocate)! எமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசும் (Iயோ 2/1)
2. கிருபாதாரபயே! என்னுடைய பாவங்களை நிவிர்த்தி செய்யும் (Iயோ 2/2)
3. இருக்கிறவரும் இருந்தவரும் வருகிறவருமானவரே! முக்காலத் திற்கும் உரியவரே! முக்காலக்காரியங்களைப் பொறுப்பெடும். நான் செய்த காரியங்கள், செய்து கொண்டிருக்கிற காரியங்கள், செய்யப் போகின்ற காரியங்கள் யாவையும் பொறுப்பெடும். (வெளி1/8)
4. அல்பாவும் ஓமேகாவுமானவரே! ஸ். விசுவாசத்தினை என்னில் துவக்கியவரே! விசுவாசத்தினை உம்மில் முடிப்பவனாய் முடிவுபரியந்தம் நிலைநிற்பவனாய் என்னை ஆசீர்வதியும் (வெளி 1/8)
5. ஆதியும் அந்தமுமானவரே! ஸ். உமக்குள்ளாய் நான் ஆரம்பித்தக் காரியங்களை முடிக்க உதவிடும். (வெளி 1/8)
6. சர்வவல்லமையுள்ள தேவனே! மனிதனின் (துன்மார்க்கரின்) வல்லமைகளை, சாத்தானின் வல்லமைகளை, அந்திகிறிஸ்து

வல்லமைகளை, கள்ளதீர்க்கதரிசி வல்லமைகளை, மேற்கொள்ள வல்லமை தாரும் (வெளி 1/8)

7. கர்த்தாவே! ஆமென் என்னப்பட்டவரே! உம் வாக்குத்தத்தங்கள் எல்லாம் எம் மேல் ஆம் என்றும் ஆமென் என்றும் ஆகக்கடவது! (வெளி 3/14)

8. எம் அப்போஸ்தலரே! (பிரதான) உம்முடைய சித்தப்படி, தீர்மானப்படி சபையை நடத்த உதவும் (எபி 3/1)

9. எம் பிரதான ஆசாரியரே! உம் சொந்த இரத்தத்தை எம் மேல் தெளித்து கத்தப்படுத்தும், உம் அன்பை உணரச் செய்யும். உம்மை வேதனைப் படுத்தாதபடி காத்தருளும் (எபி 3/1) (எபி4/14)

10. விசுவாசத்தை துவக்கியவரே! விசுவாசத்தை முடிப்பவரே!ஸ் விசுவாசத்தில் நிலைகொண்டிருக்கச் செய்யும். விசுவாசம் வரமாய், கனியாய், என்னில் அளவில்லாமல் பெருகுவதாக. (எபி 12/2)

11. நித்திய இரட்சிப்பை அடைவதற்குக் காரணமானவரே! நித்திய இரட்சிப்பினால் என்னை அலங்கரியும். சத்துரு, சாத்தான் மேல் பூரண் ஜெயம் தாரும் (எபி 5/9)

12. பிதாவினை நேசிக்கும் நேசக்குமாரா! பிதா பிரியம் வைத்திருக்கும் நேசக்குமாரா! எம் மேல் பிரியம் வைத்தருளும். நாங்கள் உம் மேல் பிரியம் வைக்க உதவி செய்யும் (மத்.3/17)

13. கிளை என்னப்பட்டவரே!ஸ் பிதாவின் பரிசுத்தம் உடையவரே!ஸ். உம்மில் நிலைத்திருக்கின்ற கிளையாக என்னை மாற்றியருளும், உம்மில் நிலைத்திருந்து கனிகளைக் கொடுக்கச் செய்யும். (சகரியா3/8)

14. என் ஆத்துமாவின் மேய்ப்பரே! என் ஆத்துமாவின் கண்காணியே! என் ஆத்துமாவைத் தேற்றும், என் ஆத்துமாவை நேசியும், என் ஆத்துமாவைக் கழுவும், என் ஆத்துமாவை வாழச்செய்யும், என் ஆத்துமாவைப் போஷியும், என் ஆத்துமாவை உயிர்ப்பியும். (1 பேது 2/25)

15. நீதியின் கிளையானவரே! எல்லா நீதிகளையும் செய்ய,நிறைவேற்ற சூழ்நிலைகள், இடம், பொருள், வசதி, வாய்ப்புகள் அளித்தருளும். (எரே 33/15)

16. வானத்திருந்து இறங்கி வந்த அப்பமே! ஸ். உம்மோடு ஐக்கியம் கொடுத்து என்றென்றும் பிழைக்கச் செய்யும் (யோ.6/41,51)

17. ஜீவ அப்பமே! உம்மோடு ஐக்கியம் கொடுத்து ஜீவன், பரிபூரண ஜீவன், நித்திய ஜீவன் உள்ளவர்களாக்கும் (யோ.6/48) (6/35)

18. இரட்சிப்பின் அதிபதியே! சகல காரியங்களிலும் இரட்சியும் (எபி.2/10)

19. தச்சனாய் வேலை பார்த்தவரே! எம் வேலைகளை ஆசீர்வதியும் (மாற். 6/3)

20. தெரிந்து கொள்ளப்பட்ட கல்லே! தெரிந்து கொள்ளப்பட்டவனாக்கும் (1பே 2/6)

21. விலையேறப்பெற்ற கல்லே! விலையேறப்பெற்றவனாக்கும் (1பே 2/6)
22. சீயோனில் வைக்கப்பட்ட மூலைக்கல்லே! உருண்டு வந்து பாவராஜ்யங்களை உடைத்தருளும் (1பே 2/6)
23. பிரதான மேய்ப்பரே! எம்மை கடைசி வரை மேய்த்தருளும் (1பே 5/1)
24. ஜீவனுள்ள கல்லே! எம்மை ஜீவனுள்ளவர்களாக்கும் (1பே 2/4)
25. கிறிஸ்துவே! அபிஷேகம் பண்ணப்பட்டவரே! அபிஷேகியும் (எபி 3/1)
26. இயேசுவே! பாவ அடிமைத்தனத்திருந்து இரட்சியும் (எபி 3/1)
27. இஸ்ரவேன் ஆறுதலே! சகல ஆறுதல் அளித்தருளும் (லூக். 2/25)
28. ஆலோசனைக்கர்த்தாவே! நல்ல ஆலோசனைகளால் நிரப்பும் (ஏசாயா 9/6)
29. சமாதான பிரபுவே! சமாதான நதியால் நிரப்பும் (ஏசாயா 9/6)
30. வல்லமையுள்ள தேவனே! வல்லமைகளால் நிரப்பும் (ஏசாயா 9/6)
31. நித்திய பிதாவே! என்றென்றும் பிதாவாயிரும் (ஏசாயா 9/6)
32. பாலகனே! களங்கமில்லாதவனாக்கும். ,,
33. குமாரனே! உம் குமாரர்களாய் வைத்தருளும் ,,
34. விடிவெள்ளி நட்சத்திரமே! விடிவெள்ளி போல்ஜொலிக்கச்செய்யும் (1 பே 1/19) (வெளி 22/16)
35. மீட்கிறவரே! என்னை நித்தியமாய் மீட்டுக்கொள்ளும் (ரோ 11/26)
36. வாசலாயிருப்பவரே! உம் வழியாய் நடந்து நித்திய ஜீவன் பெற நடத்தும் (யோ 10/7,9)
37. வழியாயிருப்பவரே! உம் மூலம் பிதாவைச் சேரப் பண்ணும் (யோ 14/4)
38. உண்மையும் சத்தியமுமுள்ளவர் என்னப்பட்டவரே! சத்தியத்தை வெளிப்படுத்தும், சத்தியத்திலே நடத்தும் (வெளி 19/11)
39. சதாகாலங்களிலும் உயிரோடிருப்பவரே! நித்திய ஜீவன் தாரும் (வெளி 1/18)
40. அஸ்திபாரமாயிருப்பவரே! நித்திய கன்மலையே! என் ஜீவியம், ஊழியம், வேலை, வீடு, கடமை, பிள்ளைகளின் படிப்பு, ஆலயம், எல்லாம் உம் மேல் உம் சத்தியத்தின் மேல் ஸ்தாபிக்கப்படுவதாக. (1கொரி 3/11)
41. ஆயக்காரருக்கும் பாவிகளுக்கும் சிநேகிதன் என்னைப்பட்டவரே! பாவி என்று தள்ளாதிரும், பரிசுத்தப்படுத்தி ஏற்றுக் கொள்ளும். (மத்.11/19)
42. தேவனுடைய ஈவே! எம் கொண்டாட்டமாய் எமக்கு வெளிப்படும் (யோ.4/10)
43. நல்ல போதகரே! ரபூனியே! ஆலோசனைக் கர்த்தாவே! ஞானத்தைப் போதிக்கும் வசனம் என்ற வரம் தாரும். (மத்.19/16)
44. நல்ல மேய்ப்பரே! தாழ்ச்சி வராது காத்தருளும் (யோ.10/11,14)
45. இஸ்ரவேலை ஆளும் பிரபுவே! எம் எல்லாக்காரியங்களிலேயும்

உம் கரமும், சிநேகமும், வழிநடத்தலும், பாதுகாவலும், ஆளுகையும் இருப்பதாக (மத்.2/6)

46. சர்வத்துக்கும் சுதந்தரவாளியே! எம் எல்லாத் தேவைகளையும் சந்தியும் (எபி.1/2)

47. தேவனுடைய பரிசுத்தரே! என்னைப் பரிசுத்தப்படுத்தும் (மாற் 1/24)

48. இரட்சணியக் கொம்பே! எமக்காய் சத்துருக்களோடும் சாத்தானோடும் யுத்தம் செய்து ஜெயம் தாரும் (லூக் 1/75)

49. தேவனுடைய சாயலாயிருப்பவரே! அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமே! அப்பா! பிதாவே! ஸ்தோத்திரம். பிதாவின் முழுவல்லமை உம் மூலமாய் எம்மேல் பாய்வதாக (IIகொரி 4/4) (கொலோ 1/15)

50. உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயாதிபதியே! உயிரோடிருக்கையிலேயே எம் கண்கள் காண உம் நாமத்தினிமித்தம் நாங்கள் சிந்திய இரத்தத்திற்காகப் பழிவாங்கும் (அப் 10/42)

51. ராஜாதிராஜவே! அந்தகாரலோகாதிபதிகளை கட்டி, அடக்கி, நசுக்கிப்போடும் (வெளி 19/16)

52. யூதருக்கு ராஜாவே! பரிசுத்தவான்களின் ராஜாவே! எமக்கு நியாயஞ்செய்யும் (மத்.2/2) (வெளி15/3)

53. ஐசுவரியசம்பன்னரே! சகல ஊழியத்தேவைகளையும் சந்தியும்

54. தேவ ஆட்டுக்குட்டியே! அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரே! உம் இரத்தம் எமக்காக நன்மையானவைகளைப் பேசுவதாக (யோ 1/29)

55. உலகத்திற்கு ஒளியாயிருப்பவரே! ஜீவ ஒளியால் நிரப்பும். பிரகாசிப்பியும் (யோ.8/12)

56. யூதாக்கோத்திரத்து சிங்கமே! சிங்கமாய் எமக்காய் யுத்தம் பண்ணும் (வெளி5/5)

57. மகிமையின் கர்த்தாவே! மகிமையான காரியங்களைச் செய்யும் (1கொரி 2/8)

58. துக்கம் நிறைந்தவராய் இருந்தவரே! எம் துக்கங்களை எல்லாம் அகற்றும் (ஏசாயா 53/3)

59. மத்தியஸ்தரே! எமக்காய் பரிந்து பேசும். (1தீ 2/5)

60. ஜீவாதிபதியே! எம் ஜீவனுக்குப் பொறுப்பெடும் (அப் 3/15)

61. தாவீதின் வேருமானவரே! எமக்கு வேராயிரும் (வெளி 22/16)

62. சீலோவா (SHILOH) சமாதானகர்த்தரே! சமாதானத்தால் நிரப்பும் (ஆதி49/10)

63. தேவனுடைய ஒரே பேறான குமாரனே! உம் பிள்ளையாக நிறுத்தும் (மத் 8/29) (யோ 3/16)

64. மறைக்கப்பட்ட தேவ ஞானமே! தேவ ஞானத்தால் நிரப்பும் (1கொரி 1/24)

65. தேவனுடைய வார்த்தையே! ஜீவவார்த்தையால் நிரப்பும் (வெளி. 19/13)